பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை 21.04.2020 கதிர் 167

## இனி இது ரகசியம் அல்ல!

நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிங்கள நடிகருமான ரஞ்சன் ராமநாயக்கா நேற்று முன்னிலைப்படுத்தப் பட்டார்.

புதுவருட பிறப்பன்று ஊரடங்கு வேளையில் ரஞ்சன் பக்கம் 02 »

# ஒத்திவைத்த பொதுத்தேர்தல் ஜூன் 20 இல்!

## உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டார் தேசப்பிரிய



கொழும்பு, ஏப்.22

இலங்கையின் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்த அறிவிப்பை விடுத்தார்.

பக்கம் 02 »

## யாழில் 44 பேருக்கு சோதனை எவருக்குமே தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்.21

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தில் 44 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் வெளியாகியுள்ளன.

எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று அந்த முடிவுகள் தெரிவிக்கின்றன என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் இந்தப் பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தன. யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 39 பேர், யாழ்.போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 4 பேர், கிளிநொச் பக்கம் 02 »

## சட்டமா அதிபர் திணைக்களம் கொரோனா நுழைந்ததால் பூட்டு

கொழும்பு, ஏப்.21

பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, சட்டமா அதிபர் திணைக்களம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இது குறித்து நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, அனைத்து அதிகாரிகளுக்கும் மறு அறிவிப்பு வரும் வரை வளாகத்துக்குள் நுழைவதைத் தவிர்க்குமாறு அறிவித்துள்ளார்.

அத்துடன், திணைக்களத்தின் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து அரச சட்டவாதிகளின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார் பக்கம் 02 »

## அபாயம் நீங்கவில்லை!

### யாழ்ப்பாண மக்கள் அவதானம் தேவை என்கிறார் சத்தியமூர்த்தி



யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும், கொரோனா வைரஸ் அபாயம் முற்றாக நீங்காததால் பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பக்கம் 02 »

## கட்சித் தலைவர்களுடன் இன்று தேசப்பிரிய பேச்சு

கொழும்பு, ஏப்.21

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இன்று செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பு இன்று முற்பகல் 10:30 மணிக்கு இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் குறித்து இந்தச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

## வவுனியாவில் சிறுமி திடீரென உயிழந்தார்

வவுனியாம், ஏப். 21

வவுனியா வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக அனுமதிக்கப்பட்ட 7 வயதுச் சிறுமி ஒருவர் திடீரென உயிரிழந்தார். வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த குறித்த பக்கம் 02 »

## நேற்று மட்டும் 33 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஏப்.21

இலங்கையில் நேற்று ஒரே நாளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய 33 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனை பக்கம் 02 »

## தீப்பற்றி எரிந்த வீடு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீடொன்று தீப்பற்றியெரிந்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதனால் அந்தப்பகுதியில், பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குருநகர் பக்கம் 02 »

## காணாமல்போன வயோதிபர் சடலமாக மீட்பு!

திருமலை, ஏப்.21

திருகோணமலை – பூம்புகார் வீதி, அம்பியார் ஒழுங்கை பகுதியில், நான்கு நாள்களுக்க முன்னர் காணாமல் போன 70 வயதுடைய வயோதிபர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று, உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 02 »

## மற்றொரு புலம்பெயர்ந்த தமிழரும் பிரான்ஸில் கொரோனாவுக்குப் பலி

பாரிஸ், ஏப். 21

புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழ்ந்து வந்த மற்றுமொரு யாழ்ப்பாணத்தவர் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

தீவகம் வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வேலணை அம்மன் கோவிலடி, 3ஆம் பகுதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடாகவும் கொண்ட நல்லையா வரதராசன் என்பவரே கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார்.

பிரான்ஸில் பெருமளவான புலம்பெயர் தமிழர்கள் உயிரிழந்து வருகின்றனர்.

பிரான்ஸ் நாட்டின் ஒட்டுமொத்தக் கணக்கீட்டின் படி ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 383 பேர் கொரோனா

தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 20 ஆயிரத்து 265 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலைத் திரும்பவும் ஒத்திவைக்க நேரிடும்!

### தமிழ்த் தேசியக் கட்சி கூறுகின்றது



“தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க நேரிடும்,

– இவ்வாறு கருத்துக் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா.

தற்போதைய நிலை குறித்து அவர் மேலும் பக்கம் 02 »

## சார்ஜண்ட் ரத்நாயக்கவுக்கு மன்னிப்பு; கோட்டாவின் முடிவுக்கு எதிராக மனு!

### உயர்நீதிமன்றில் சட்டத்தரணி சயந்தன் தாக்கல்

கொழும்பு, ஏப்.21

மிருசுவில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட எட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை வழக்குக் குற்றவாளியாகக் கருதப்பட்டு மரணதண்டனை விடுக்கப்பட்ட இராணுவத்தின் ஸ்டாவ் சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்காவுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்த ஜனாதிபதி கோட்டபாயவின் உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நேற்று efiling மூலம் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி படுகொலை செய்யப்பட்ட எண்மரில் உறவினர் சார்பில் இந்த மனுவை சட்டத்தரணி கேசவன் சயந்தன் உயர்நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராமநாயக்காவின் தேடி வந்த ஒருவரைப் பொலிஸார் மறித்தனர். அவரை ஏன் மறித்தீர்கள் என்று அந்தப் பொலிஸாருடன் ரஞ்சன் ராமநாயக்கா வாதிட்டார். அவ்வளவுதான். அரசு ஊழியரைப் பணி செய்ய விடாமல் தடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கா புதுவருடப் பிறப்பன்று கைது செய்யப்பட்டார்.

கடந்த தைப்பொங்கலன்றும் ரஞ்சன் ராமநாயக்கா கைது செய்யப்பட்டிருந்தார். அப்போதும் அவரைப் பிணையில் மீட்டவர் அவரது நல்ல நண்பரும், அவரது சட்டத்தரணியுமான சுமந்திரன்தான்.

நேற்றும் நுகேகொடை நீதிமன்றத்திலும் ரஞ்சனை மீட்க அவரே தோன்றினார்.

'தோன்றினார்' என்று நான் கூறுவதற்குக் காரணம் உண்டு. பொதுவாக நீதிமன்றில் சட்டத்தரணி முன்னிலையாவதற்கு தோன்றுதல் (Apper) என்ற பதம் பாவிப்பதுண்டு.

திடீரென ஒரு இடத்தில் வெளிப்படுவதையும் 'தோன்றுதல்' என்று கூறலாம். அப்படித்தான் நேற்று நீதிமன்றத்துக்கு வர வேண்டியிருந்தார் சுமந்திரன்.

கடந்த ஒரு மாத காலத்துக்கு மேல் நடைமுறையில் இருக்கும் ஊரடங்கை ஒழுங்காகக் கடைப்பிடிப்பவர் அவர். பிரதமர் அலுவலகம் கூட்டிய கட்சித் தலைவர்கள் மாநாடு தவிர பிற எதற்காகவும் வீட்டை விட்டு வெளியே வராதவர். பொலிஸ் உத்தரவை ஒழுங்காக – சர்ச்சை பண்ணாமல் – கடைப்பிடிப்பவர்.

நேற்றுத் தமது நண்பர் ரஞ்சனுக்காக ஊரடங்கு பாஸ் இன்றி வெள்ளவத்தையில் இருந்து நுகேகொடைக்கு வரவேண்டியவரானார். ஊரடங்குத் தடைகளைத் தாண்டி வந்தவர் என்பதால் 'தோன்றினார்' என்றேன்.

வழக்கு எடுக்கப்பட்டதும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஒரு விடயத்தை நீதிவானுக்கு எடுத்து விளக்கினார்.

நாட்டில் ஊரடங்கு உத்தரவை சட்டரீதியாகப் பிரகடனப்படுத்துவதற்கு உள்ள வழிவகைகளை அவர் விவரித்தார். இந்த வகை எதிலும் தற்போதைய ஊரடங்கு அடங்கவில்லை, அதனால் அதற்கு சட்ட ரீதியான வலு ஏதுமில்லை என்றார் அவர்.

வெறுமனே ஊடக அறிவிப்பு மூலம் ஊரடங்கை நடைமுறைப்படுத்துகின்றார்கள். அவ்வளவுதான். இந்தப் பிரச்சினையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு எல்லோரும் அதற்கு அடங்கி நடக்கின்றோம். ஆனால் இது சட்டரீதியான ஊரடங்கே அல்ல என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சட்ட ரீதியான ஊரடங்கை பிறப்பிக்கப் போவதில்லை என்று அதிகாரவர்க்கம் அடம் பிடிக்கின்றது. பாவம் பொலிஸ். அதைச் சட்டரீதியானது அல்ல என்று தெரிந்து கொண்டும் நடைமுறைப்படுத்தும் கட்டாயத்தில் உள்ளது என்று விவரித்தார்.

ஊரடங்கு சட்ட ரீதியானது, அதற்கான சட்ட வலு யாது என்பதைக் காட்ட முடியாது திணறியது பொலிஸ்.

அதனால்தான் இந்த ஊரடங்கு உத்தரவை மீறியவர்கள் என்று கைது செய்யப்பட்ட யாவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பிணையிலேயே விடுவிக்கப்படுகின்றனர். இவர் உயர்மட்ட நபர் என்பதால் உங்கள் முன்னால் கொண்டு வரவேண்டி ஏற்பட்டு விட்டது என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இன்னொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

*"இதோ இப்போது நான் ஊரடங்கு 'பாஸ்' இல்லாமல்தான் இந்த நீதிமன்றத்துக்கு வந்துள்ளேன். இங்கிருந்து நான் வெளியே போகும் போது இந்தப் பொலிஸார் என்னை வழிமறித்து எங்கே ஊரடங்கு பாஸ் என்று கேட்கலாம். கேட்பார்கள். அதற்கு நான் 'ஏன் பாஸ்? சட்டரீதியான ஊரடங்கு இருக்கின்றதா? இருந்தால் அது எந்தச்சட்டத்தின் கீழ்?' – என்று அந்தப் பொலிஸ் அதிகாரியுடன் விவாதிப்பேன், மோதுவேன்.*

*"அப்படி நான் கேட்டதற்காக – அல்லது விவாதித்ததற்காக 'அரச அதிகாரியைக் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தேன்.' – என்று கைது செய்து வழக்குப் போடலாமா? ஆனால் அதுதான் ரஞ்சன் ராமநாயக்காவுக்கும் நடந்தது"* – என்று சுமந்திரன் கூறியதும், ரஞ்சனுக்குப் பிணை வழங்கும் முடிவுக்கு வந்தார் நீதிவான்.

அதை ஆட்சேபித்த பொலிஸ் தரப்பு இன்னொரு தடவை சுமந்திரனிடம் வாங்கிக் கட்டியது.

ரஞ்சன் ராமநாயக்கா பொலிஸாருடன் வாய்த்தர்க்கம் புரிந்த வீடியோ பதிவு உள்ளதாகவும் அது இன்னும் பொலிஸ் விசாரணையாளர்களுக்குக் கிடைக்கவில்லை எனவும், அது கிடைத்து, அதனைப் பரிசீலித்த பின்னர் பிணை விண்ணப்பத்தைப் பரிசிலிக்கலாம் என்று குறிப்பிட்டு காலத்தை இழுத்தடிக்க முயன்றது பொலிஸ்.

இடையில் குறுக்கிட்டார் சுமந்திரன்.

*"இந்த வாய்த்தர்க்கம் அல்லது முரண்பாடு இடம்பெற்ற அச்சமயம் ஊரடங்கு. சீருடை தரித்த பொலிஸாரைத் தவிர வேறு யாரும் அங்கு இருக்கவில்லை. அப்படி சீருடை தரித்த பொலிஸார் ஒருவரே அந்த வீடியோப் படத்தைப் பிடித்தார். அப்படி சீருடை தரித்த பொலிஸால் பிடிக்கப்பட்ட அந்த வீடியோ அன்று மாலையே தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது! ஆனால் பொலிஸ் துறைக்கு அந்த வீடியோ இன்னும் கிடைக்கவில்லையாம். சீருடை தரித்த பொலிஸாரின் விசுவாசம் எங்கு, எந்தப் பக்கம் உள்ளது என்பதற்கு இது நல்லதோர் உதாரணம்"* – என்றார் சுமந்திரன்.

அதை செவிமடுத்த நீதிவான் ரஞ்சன் ராமநாயக்காவை உடனடியாகவே சொந்தப் பிணையில் வீடு திரும்ப அனுமதித்தார்.

அப்போது நீதிமன்றத்திடம் சுமந்திரன் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஊரடங்கு உத்தரவே சட்ட ரீதியாக இல்லை. இந்த சீத்துவத்தில் அந்த ஊரடங்கு உத்தரவின் கீழ் அந்த உத்தரவை மீறிய நபர்களின் வாகனங்கள் என்ற பெயரில் நாடு முழுவதும் பல்லாயிரம் வாகனங்களைப் பொலிஸ் தரப்பு பறிமுதல் செய்து தடுத்து வைத்துள்ளது. அதற்கான, றிசிற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ரஞ்சன் ராமநாயக்காவின் வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. எனது கட்சிக்காரர் அதை இப்போது கோரப்போவதில்லை. ஆனால் சட்டம் இல்லாத ஒரு விவகாரத்தின் பெயரால் இப்படி வாகனங்களைப் பறிமுதல் செய்து தடுத்து வைக்கப் பொலிஸாருக்கு அதிகாரமில்லை. இந்த சட்டமீறல் நடவடிக்கைக்காக பல்லாயிரம் பொதுமக்களும் சட்ட ரீதியான நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்தால் – அப்படிச் செய்வதற்கு நிறைய வாய்ப்புண்டு – பொலிஸ் திணைக்களத்தை விற்றுத்தான் நஷ்ட ஈடு கெடுக்க வேண்டி நேரும் என்று சுமந்திரன் எச்சரித்தார்.

பாவம் பொலிஸ்!

இவ்வளவும், சட்டத்தில் எழுதாத நாடகத்தில் எல்லோரும் நடிக்கின்றோம் என்ற பாணியில் காரியமாற்ற வேண்டிய கட்டாயம் பொலிஸாருக்கு...! அவர்கள் என்னதான் செய்வார்கள்?

–மின்னல்–

## அபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று காலை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனோ வைரஸ் தொற்றில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒருவரும் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவர்களில் 16 பேருமாக இதுவரை 17 பேருக்கு தொற்று இருப்பது பரிசோதனைகளில் இனங்காணப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதிப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தவர்களில் 4 பேர் குணமடைந்த நிலையில் தற்போது தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் நால்வரும் அரியாலையைச் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்களது வீடுகளுக்கே நேற்று அனுப்பி வைக்கப்பட்டு தொடர்ந்து 14 நாள்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதே போல யாழ்ப்பாணத்தில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற மேலும் சிலரும் குணமடைந்து வருகின்ற நிலையில் அவர்களும் விரைவில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் யாழ்ப்பாணத்தில் தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்றது. சமூகத்திற்குள் தொற்று பரவவில்லை என்பதால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

ஆனாலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனோ ஆபத்து நீங்கிவிட்டதாகக் கருத முடியாது.

எனவே ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும் நிலையில் சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொது மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். அதனூடாகவே தொற்று ஏற்படுவதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யடுத்து, இலங்கையில் வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 304 ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க புரவில தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் 24 பேருக்கு தொற்று ஏற்பட்டிருப்பது நேற்றுக் காலை கண்டறியப்பட்டது. இதன் பின்னர் நேற்று பிற்பகல் மேலும் 8 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. நேற்று மாலை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மற்றுமொரு நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நேற்று மாத்திரம் 33 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான மற்றுமொரு நபர் பூரண குணமடைந்துள்ளதுடன், பூரண குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியவர்களின் எண்ணிக்கை 98ஆக அதிகரித்துள்ளது.

## தீப்பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டடி வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலேயே நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றவேளை அந்த வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து உடனடியாக மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினருடன் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

அந்த வீட்டில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவரும் தாயார் ஒருவரும் வசித்து வருகின்றனர். ஒரு சகோதரி அந்த வீட்டுக்கு வந்து செல்கின்றார் எனவும், குடும்பத்தில் தினமும் சண்டைகள் நடக்கின்றன எனவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில், குடும்ப தகராற்றின் காரணமாக, வீட்டுக்குத் தீவைக்கப்பட்டிருக்கலாம் எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

## தேர்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தவை வருமாறு:–

பாதுகாப்பான சூழ்நிலை உறுதிப்படுத்தாத வரையில் தேர்தலை நடத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

கொரோனா நெருக்கடியில் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு வாரங்கள் மிக முக்கியமானவையாக இருக்கப்போகின்றன. தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க நேரிடும் என்றே நாங்கள் கருதுகின்றோம் – என்றார் அவர்.

## காணாமல்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதியைச் சேர்ந்த பெருமாள் சோலைமுத்து என்பவரே, சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

கடந்த 16ஆம் திகதி முதல் இவர் காணாமல் போயிருந்த நிலையில் அவரது மகன் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து, காட்டுப் பகுதிகளில் தேடி பார்த்தபோதே அவர் சடலமாகக் கிடந்தமை கண்டறியப்பட்டதாக தெரியவருகிறது.

சடலத்தை திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ. எஸ். எம். ரூமி சென்று பார்வையிட்டமையுடன் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

பிரேதப் பரிசோதனைக்காக, திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் 44 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் ஆகியோரிடம் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவற்றில் எவருக்கும் தொற்று இல்லை என்றார் அவர்.

## ஒத்திவைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது குறித்து நேற்று இரவு சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவுவதால் தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் ஆணையம் முன்பு முடிவு செய்திருந்தாலும், நாட்டின் சட்டரீதியான நடவடிக்கை அவசியம் என்று கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, பொதுத்தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று ஒன்று கூடி கலந்துரையாடியதுடன், பல துறையினர்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்துகொண்டது. நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், பேராசிரியர் நலின் அபேசேகர ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களாகச் செயற்படும் மாவட்ட அரச அதிபர்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் பின்னரே மாவட்ட அரச அதிபர்கள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சுகாதாரத்துறையின் தலைமை அதிகாரிகள், தபால் மா அதிபர் மற்றும் அரச அச்சகர் உள்ளிட்ட தரப்பினரும் நேற்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினருடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகச் சகல கட்சிகளினதும் பொதுச் செயலாளர்கள் இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த கலந்துரையாடல் இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளது.

## சார்ஜண்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளப்படும் போது மனுதார்கள் சார்பில் கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாக வாதிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற அரசமைப்பின் 12ஆம் உறுப்புரையின் கீழ் இந்த வழக்கத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதின்மூன்று வருட சட்டப் போராட்டத்தின் பின்னர் மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' மன்று இந்த இராணுவச் சிப்பாய்க்கு எதிராக மரணதண்டனை தீர்ப்பு அளித்தது என்பதும் –

பின்னர் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தினால் அந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கவை

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறுமி, சுகவீனம் காரணமாக நேற்று மாலை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் தேக்கவத்தையைச் சேர்ந்த அயிஸ்டன் சர்மி என்ற 7 வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அந்தச் சிறுமிக்கு கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணமடைந்திருந்தாரா என்ற சந்தேகத்தின் அடிப்படையில், மாதிரிகள் பெறப்பட்டு, பரிசோதனைக்காக, அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சிறுமிக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு தொற்றுநீக்கல் செய்யப்பட்டுள்ளது.

## சட்டமா அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் தற்போது நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் பொலிஸார், பிற தொடர்புடைய அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் தங்களுக்கும் முழு ஒத்துழைப்பை மீண்டும் வலியுறுத்துவதற்கும் எதிர்வரும் நாள்களில் நிலைமையை சீராக்க அனைத்து நடவடிக்கைகளும் விரைவாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா வைரஸ் தொற்றை எதிர்கொண்டு எமது நாடு வெற்றி கண்டுள்ளது என்ற உணர்வு மக்களிடையே இன்று!

## ஜனாதிபதி கோட்டாபயவின் வழிகாட்டலே காரணம் என்கிறார் டக்ளஸ்

**நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பதனால்தான் உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும் கொரோனா என்ற கொடிய தொற்றை எதிர்கொண்டு எமது நாடு வெற்றிகண்டுள்ளது என்ற உணர்வு மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ளது.**

**கொரோனாவை எதிர்கொண்டமை போல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும் சரியான முடிவை எடுப்பார். - இப்படி நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.**

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தென்றல் அலைவரிசைக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கொரோனா என்ற கொடிய தொற்றை எதிர்கொள்ள துறைசார் தரப்புகளான அமைச்சுக்கள், மருத்துவத்துறை, சுகாதாரத்துறை, முப்படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தரப்புக்களை ஒன்றிணைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு சரியான தலைமைத்துவத்தை கொடுத்து அத்தொற்றை நாட்டில் பரவவிடாது வெற்றி கண்டாரோ அதே போல இலங்கையின் சட்டம் மற்றும் அரசமைப்புக்கள் பாதுக்காகப்படும் வகையில் தேர்தலை நடத்துவதா, இல்லையா என்ற கேள்விகளுக்கும் பொருத்தமான தீர்வை வழங்குவார் என நம்புகின்றேன்.



அத்துடன் நாட்டின் ஜனாதிபதியாக கோட்டபாய ராஜபக்ஷ இருப்பதனால்தான் உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா என்ற கொடிய தொற்றை எதிர்கொண்டு எமது நாடு வெற்றிகண்டுள்ளது என்ற உணர்வு மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ளது.

நாட்டின் தேவையறிந்து சரியான தலைமையை கொடுக்கும் வகையான தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றமையால் ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தலை நடத்துவதற்கான பொருத்தமான தீர்வொன்றையும் வழங்குவார் என்று நம்புகின்றேன். அதற்குப் பூரணமான ஒத்துழைப்பை நாட்டு மக்கள் அனைவரும் வழங்கவேண்டும்.

குறிப்பாக சமூக இடைவெளிகளை கடைப்பிடிப்பது உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதியால் கூறப்படும் அறிவுறுத்தல்களை மக்கள் முழுமையாக கடைப்பிடித்துடன் கொரோனா தொற்றை முற்று முழுதாக எமது பகுதிகளிலிருந்து ஒழித்து இயல்பு நிலையை முழுமையாக கொண்டுவர அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று நாடு திரும்புகின்றார்கள்

கொவிட் 19 வைரஸ் பரவலையடுத்து, வெளிநாடுகளில் சிக்கியுள்ள மாணவர்கள் சிலரை இன்று நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இந்திய மற்றும் பாகிஸ்தானிலுள்ள பல்கலைக்கழகங்களில கல்வி கற்கச் சென்ற சுமார் 100 இற்கும் மேற்பட்டோர், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இன்று அழைத்து வரப்படவுள்ளனர்.

இவ்வாறு அழைத்துவரப்படும் சகலரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கூட்டுத் தொழுகை, ஒன்றுகூடல் எதுவும் பள்ளிவாசலில் வேண்டாம்




நமழான் மாதம் முதல், மறுஅறிவித்தல் வரை இலங்கை வக்ப் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைவாக இமாம்கள் மற்றும் முஅத்தின்மார் அல்லாத எந்தப் பொதுமகனும் பள்ளிவாயல்களைத் திறக்க வேண்டாமென்று முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரும் வக்ப் சபைப் பணிப்பாளருமான ஏ.பி.எம். அஷ்ரப் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பணிப்பாளர் அஷ்ரப் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜும்ஆ தொழுகை, ஐவேளைத் தொழுகை, தராவீஹ் தொழுகை உட்பட எதுவிதமான கூட்டுத் தொழுகைகளையும் நடாத்த வேண்டாம் என்றும் இப்தார் நிகழ்ச்சிகள் போன்ற எதுவித ஒன்றுகூடல்களையும் நடாத்த வேண்டாம் என்றும் பள்ளிவாயிலின் உள்ளேயோ அல்லது பள்ளிவாயல் வளாகத்தினுள்ளோ கஞ்சி காய்ச்சவோ அல்லது கஞ்சி பகிர்ந்தளிக்கவோ வேண்டாம்.

பள்ளிவாசல் ஜமாஆத்தினருக்கு இந்தப் பணிப்புரைகள் பற்றி முறைப்படி அறிவிக்குமாறும், கொவிட் – 19 தொடர்பாக சுகாதார அமைச்சினாலும் பாதுகாப்புத் தரப்பினராலும் வழங்கப்படும் பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் பற்றி ஜமாஆத்தினருக்கு தெளிவூட்டுவதோடு அவற்றைப் பின்பற்றியொழுகுமாறும் மக்களை ஊக்கப்படுத்துமாறும் இலங்கை வக்ப் சபை அனைத்து பள்ளிவாயல் நிருவாகிகளையும் பணிக்கின்றது. – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சண்டிலிப்பாயில் கொள்ளை; 9 மாதம் கடந்து பெண் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21

பிரான்ஸிலிருந்து வருகை தந்து தங்கள் உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த குடும்பத்திடம் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள், பணம் என்பன கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர் புடைய குற்றச்சாட்டில் குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 6 பவுண் எடையுள்ள 2 சோடி கை வளையல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த ஜூலை 23ஆம் திகதி இரவு சண்டிலிப்பாய் டச்சு வீதியில் இடம்பெற்றது.

சுமார் 9 மாதங்களின் பின்னர் சந்தேக நபர், யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்பு குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத் திருவிழாவுக்காக பிரான்ஸிலிருந்து வருகை தந்து தங்கள் உறவினர்கள் வீட்டில் குடும்பம் ஒன்று தங்கியிருந்தது. சம்பவ தினத்தன்று இரவு வீட்டிலிருந்த அனைவரும் உறங்கிய பின்னர் வீட்டின் யன்னல் கம்பியை வளைத்துக்கொள்ளையர்கள் வீட்டுக்குள் உள்நுழைந்தனர்.

இதன்போது வீட்டுக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 30 பவுண் தங்க நகைகள், 600 யூரோ மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டன என்று பாதிக்கப்பட்டவர்களால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவத்தில் கொள்ளையிடப்பட்ட 6 பவுண் எடையுள்ள 2 சோடி கை வளையல்கள் கல்வியங்காடு பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. அதனை அடகு வைத்த நாவற்குழியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com


## பந்து ஜனாதிபதியின் களத்தில்

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கையில் கட்டவிழ்ந்த தேர்தல் அரசியலில் இப்போது பந்து ஜனாதிபதியின் களத்துக்குள் அடிக்கப்பட்டு விட்டது. அதனை இனி அவர் எவ்வாறு விளையாடப் போகின்றார் என்பதில்தான் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

முன்னர் தேர்தலை ஒத்திவைத்த தேர்தல் ஆணையம், புதிய திகதி அறிவிக்காமல் அப்படிச் செய்தமை தவறு என்று ஆட்சித் தரப்பின் சிரேஷ்ட தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தி வந்தார்.

அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் தருவது போன்ற நடவடிக்கையை முன்னெடுத்தமை மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் சில அரசியல் நகர்வுகளுக்குக் கனகச்சிதமாக 'செக்' வைத்திருக்கின்றது சுதந்திரக் தேர்தல் ஆணையம்.

அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தல் ஒன்று ஏதேனும் பிரதேசத்தில் நடத்தப்பட முடியாமல் போனால் அந்த இடத்தில் தேர்தல் நடத்துவதற்கான புதிய திகதியை ஜனாதிபதி அறிவிக்க முடியும் என்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 113ஆவது பிரிவு கூறுகின்றது.

ஏப்ரல் 25ஆம் திகதி அறிவிக்கப்பட்ட தேர்தல் நடத்தப்பட முடியாமல் போயுள்ள சூழலில், இந்த 113ஆவது பிரிவின் கீழ் தேர்தலை நடத்துவதற்கான புதிய அறிவிப்பை ஜனாதிபதி விடுக்க முடியும் என்றும், ஏப்ரல் 25ஆம் திகதி அறிவிக்கப்பட்ட தேர்தல் தினம் கழிந்ததும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தேர்தலுக்கான புதிய திகதிகளை பிரதேச ரீதியாகப் பிரித்து ஜனாதிபதி அறிவிப்பார் என்றும் பேச்சடிப்பட்டது.

ஆனால், தேர்தலுக்கான புதிய திகதி ஒன்றை – ஜூன் 20ஆம் நாள் என்று – நேற்று முடிவெடுத்து அறிவித்தமை மூலம் ஜனாதிபதி புதிய தேர்தல் திகதியைப் பிரகடனப்படுத்துவதற்கான வாய்ப்பை இழுத்து மூடிவிட்டது தேர்தல் ஆணையம்.

தேர்தல் ஆணையத்தின் நேற்றைய தீர்மானத்தினால் புதிய அரசமைப்பு நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது. இத்தகைய நெருக்கடி ஒன்று உருவாகும் என எதிர்பார்த்துத்தான் இது விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை – பரிந்துரையை – உங்களுக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கோரிப் பொறுங்கள் என ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்தது தேர்தல் ஆணையம். பெரும் அடம் பிடித்து – பிகு பண்ணி – அப்படி உயர்நீதிமன்றத்திடம் ஆலோ சனை கோரும் தேவைப்பாடு ஏதும் எழவில்லை என்று பதிலளித்த ஜனாதிபதி கோட்டாபய இப்போதைய நிலையில் இவ்விடயத்தில் தாமாக உயர்நீதிமன்றத்துக்குப் போகும் அல்லது உயர்நீதிமன்றத் துக்கு அவரது தரப்பு இழுத்து வரப்படும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

புதிய நாடாளுமன்றத்தை அடுத்த மூன்று மாதத்துக்குள் கூட்டுவார் என்ற நிபந்தனையுடன்தான் இருக்கும் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

அதன்படிதான் மார்ச் 2ஆம் திகதி – அதற்குப் பின்னரும் சுமார் ஆறு மாதகாலம் பதவியில் இருக்கக் கூடிய நாடாளுமன்றத்தை – ஜனாதிபதி முற்கூட்டியே கலைத்தார். ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் என்றும் மே 14ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடும் என்றும் அவர் பிரகடனப்படுத்தினார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. ஆனால் தேர்தல் தள்ளிப் போய்விட்டது. அதுவும் ஜூன் 20ஆம் திகதிக்கு.

இன்றைய நிலையில் மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மூன்று மாதம் முடிந்ததும் (ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர்) கூடுவதற்கு வாய்ப்பில்லை.

அதனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 90 நாள்கடந்தும் நாட்டில் ஒரு நாடாளுமன்றம் இல்லை என்ற ஜனநாயக மறுப்பு ஏற்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றம் 90 நாள்களில் கூடும் வாய்ப்பு இல்லை என்பதால், அந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யும் உறுதிப்பாட்டுடன், இருக்கின்ற நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் பிரகடனம் வெற்றும் வறிதானதும் என உயர்நீதிமன்றம் கருதக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அத்தகைய உத்தரவு ஒன்றை வெளியிடுமாறு சாதாரண பிரஜை உயர்நீதிமன்றத்தை அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் கோரி, உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பெறமுன்னர் –

ஜனாதிபதி இரண்டு விடயங்களைச் செய்ய முடியும்.

ஒன்று – நாடாளுமன்றத்தைக் கலைக்கும் எனது பிரகடனத்தில் நான் குறிப்பிட்டவாறு புதிய நாடாளுமன்றத்தை 90 நாள்களில் என்னால் கூட்ட வாய்ப்பில்லாமல் போய்விட்டது, இந்தப் பின்புலத்தில் நான் என்ன செய்வது என்று உயர்நீதிமன்றத்திடம் ஆலோசனையை ஜனாதிபதி கோரிப்பெறலாம்.

அல்லது – இதே காரணத்தின் நிமித்தம், நாடாளுமன்றத்தைக் கலைத்த எனது முன்னைய பிரகடனத்தை வாபஸ் பெற்று, பழைய நாடாளுமன்றம் மீண்டும் கூடிச் செயற்பட அனுமதிக்கின்றேன் என்றோ, அல்லது அந்தப் பிரகடனத்தை வாபஸ் பெற்று, மீண்டும் நாடாளுமன்றத்தைப் புதிதாகக் கலைக்கின்றேன் என்று கூறி புதிய பிரகடனத்தை வெளியிட்டோ அவர் நடவடிக்கை எடுக்கலாம்.

இந்த இரண்டில் ஏதோ ஒன்றைச் செய்ய அவர் தவறுவாரேயானால், இதையொட்டி – அவரது நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனத்தை வெற்றும் வறிதுமானதாக அறிவிக்கக் கோரி, பிரஜை ஒருவர் தாக்கல் செய்யக்கூடிய அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை அவர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

எப்படியாயினும் பந்து இப்போது ஜனாதிபதியின் களத்துக்குள்தான்!

# சடலங்களை எரிக்கும் கட்டாயம் குறித்து அரசு மீள்பரிசோதனை செய்ய வேண்டும்!

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தல்

கொவிட் - 19 வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோரின் சடலங்களை, தகனம் செய்வது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை, மீள் பரிசோதனை செய்யுமாறு, தேசிய சமாதானப் பேரவை, நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரியுள்ளது.

கொவிட் - 19ஆல் உயிரிழந்தவர்களின் உடலைத் தகனம் செய்யவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இது தொடர்புடைய ஒழுங்குவிதியை, சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது -

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம், சமய நம்பிக்கைகளுக்கு அமையவும் நாட்டில் ஒரு பகுதி மக்களின் நடைமுறைக்கு ஏற்ற வகை யிலும் இல்லை என்றும் அத்துடன், ஒரு பகுதி மக்களை பாதிப்பதாகவும் அமைந்துள்ளது.

குறிப்பாக, இந்தத் தீர்மானம் குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறு, முஸ்லிம் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கொவிட் - 19 வைரஸ் பரவுவது குறித்து, விஞ்ஞான நிலைப்பாட்டை கருத்தில் கொள்வது, அரசாங்கத்தின் பொறுப்பா கும் என்றும் தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

கொவிட் - 19ஆல் உயிரிழந்தவர்களின் உடல்களைப் புதைத்தல், தகனம் செய்தல் ஆகிய இரண்டு முறைகளை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி, அதை பல நாடுகளும் கடைபிடித்து வருகின்ற நிலையில், அரசாங்கத் தின் இந்தத் தீர்மானம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தீர்மானத்துக்கு முரணமாக இருக்கிறது. - எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் உடையில் வந்த நபரின் தாக்குதலில் 13 கனேடியர்கள் சாவு

## பொலிஸ் அதிகாரி ஒருவரும் அவர்களில் அடக்கம்

ஒன்றாரியோ, ஏப்ரல் 20

கனடாவில் பொலிஸ் உடையில் வந்த நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

நோவா ஸ்காட்டா மாகாணத்தின் என் பீல்ட் பகுதியில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. .

அப்போது, அங்கு பொலிஸ் வாகனத்தில் பொலிஸார் போன்றே உடை அணிந்து வந்த கெப்ரியல் வார்ட்மென் என்ற நபர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியைக் கொண்டு அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் பல மணி நேரப் போராட்டத்திற்கு பின் துப்பாக்கிச்சூடு நடத்திய கேப்ரியலை சுட்டுக்கொன்றனர்.

அதற்கிடையில், கேப்ரியல் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பெண் பொலிஸ் அதிகாரி உள்பட 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

# ரயில் பயணிகளுக்கான கட்டுப்பாடுகள்



கொவிட் - 19இன் அச்சம் இன்னும் நீங்கவில்லை என்பதால், இருமல், காய்ச்சால் பாதிக்கப்பட்டோர், ரயில்களில் பயணிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரவித்து ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் திலந்த பெர்ணான்டோ, பயணிகளின் பாவனைக்காக, 23 ரயில்கள் இயங்க ஆரம்பித்துள்ளன எனவும் இவை, விசேடமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்காகவும் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்காவும் என, கொழும்பு மாவட்டத்துக்குச் செல்லும் மற்றைய மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்காகவே இயக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனவே, ரயில்லே நிலையத்துக்கு வருகை தருவோர், உகந்த ஆவணங்களைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் பருவக்காலச் சீட்டைக் கொண்டிருப்போர், இந்த மாதத்துக்கென்று புதுப்பிக்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாத பருவகால சீட்டையே, இந்த மாதத்துக்குப் பயன்படுத்தலாம் என்றும் இதன் பிரகாரம், கண்டி, றம்புக்கனை, பொல்கஹாவெல, மஹோ, கனேவத்த, ராகமை, சிலாபம், புத்தளம், அவிசாவளை, கொஸ்கம, பெலியத்த, காலி, ஹிக்கடுவ, அளுத்கம ஆகிய நிலையங்களில் ரயில்கள் சேவையில் ஈடுபடும் என்று அவர் கூறினார்.

ரயில்களில் பயணக்கும் அனைத்து பயணிகளும் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும் என்றும் சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பிற்பற்றுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஒரு ரயில் பெட்டியில், 50 பயணிகள் மாத்திரம் பயணிக்க வேண்டும் என்றும் ரயிலில் பயணிக்கும்போது, வெளியில் எச்சில் துப்புவது, ரயில் நிலையத்தில் எச்சில் துப்புவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

எனவே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரயில்களில் யாசம் செய்தல் மற்றும் உணவுப்பொருள்களை விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நாளை

22.04.2020

புதன்கிழமை

நட்சத்திரம்:ரேவதி பி.ப 02.11

திதி : சதுர்த்தசி காலை 06.49 வரை

இராகுகாலம் : 12.01 - 01.31

சுப நேரம் : 04.31 - 06.01

# தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்து இந்தோனேசியாவில் 9 பேர் சாவு





இந்தோனேசியாவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் ஒரு பெண் உள்பட 9 பேர் உயிரிழந்தார்கள்.

தென்கிழக்காசிய நாடான இந்தோனேசியா கனிமவளம் நிறைந்த நாடாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் தங்கம், தாமிரம் மற்றும் நிலக்கரி போன்ற கனிமங்கள் மிகுந்து காணப்படுகின்றன. இதனால் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

முறையான உரிமம் பெற்று, உரிய பாதுகாப்பு அம்சங்களுடன் பல சுரங்கங்கள் இயங்கி வரும் அதேவேளையில், சட்ட விரோத மற்றும் உரிமம் பெறாத சுரங்கங்களும் இந்தோனேசியாவில் பரவலாகக் காணப்படுகின்றன.

நாட்டின் மேற்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள சோலோக் நகரில் அனுமதி பெறாது இயங்கி வந்த தங்கச் சுரங்கம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடிந்து விழுந்தது. உள்ளூரைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் இந்தச் சுரங்கத்தில் வேலை பார்த்து வந்தனர்.

அந்தப் பகுதியில் பெய்த பலத்த மழையே சுரங்கம் இடிந்து விழக் காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். திடீரென ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக தங்க சுரங்கம் இடிந்து விழுந்தது.

பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அனைவரும் சுரங்கத்தினுள் சிக்கிக்கொண்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கிய சுரங்கத் தொழிலாளர்கள் குறித்து அக்கம்பக்கத்தினர் அளித்த தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்தனர்.

இடைவிடாது கொட்டிய மழைக்கு மத்தியிலும் தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு குழுவினர் சுரங்க தொழிலாளர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். எனினும் இடிபாடுகளுக்குள் சிக்கிய 9 தொழிலாளர்களையும் பிணமாகத்தான் மீட்க முடிந்தது.

இதேப்போல் கடந்த ஆண்டு இறுதியில் வடக்கு சுலாவேசி மாகாணத்தின் மோங்கோன்டவ் நகரில் இயங்கி வந்த சட்டவிரோத தங்க சுரங்கம் இடிந்து விழுந்ததில் 16 பேர் உயிரிழந்தனர்.

## ஆபத்து குறைந்த பகுதியாக வுஹான் அறிவிக்கப்பட்டது!



கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட் சீனாவின் வுஹான் நகரம் ஆபத்துக் குறைந்த பகுதியாக சீன அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு இறப்பு விகிதம் குறைந்துவிட்டதால் இந்த அறிவிப்பைச் சீன சுகாதாரத்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

சீன சுகாதாரத்துறை வரையறுத்துள்ள விதிகளின்படி, கடந்த 14 நாட்களாக சீனாவின் நகரங்கள், மாவட்டங்கள், கிராமங்கள் போன்றவற்றில் எந்தவிதமான புதிய கொரோனா நோயாளிகளும் கண்டறியப்படவில்லை. இதனால் வுஹான் அது ஆபத்து குறைந்த, இடர் குறைந்த பகுதியாக அறிவிக்கப்பட்டது.

50 கொரோனா நோயாளிகளுக்கும் குறைவாகவோ அல்லது 50 நோயாளிகளுக்கும் அதிகமாகவோ கண்டறியப்பட்டால் அது நடுத்தரமான பாதிப்பு கொண்ட நகராகவும், 50 கொரோனா நோயாளிகளுக்கும் மேலமானவர்களுக்குத் தீவிரமாகப் பரவும் நிலை இருந்தால் அது ஆபத்து மிகுந்த பகுதியாகவும் அறிவிக்கப்படும்.

சீன தேசிய சுகாதார ஆணையம் நேற்று வெளியிட்ட தகவலில், நாட்டில் இன்று 16 பேருக்கு புதிதாகக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதில் 9 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள். 7 பேர் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள். சீனாவில் இதுவரை கொரோனாவுக்கு 4 ஆயிரத்து 632 பேர் உயிரிழந்துள்ளனர். 82 ஆயிரத்து 735 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 77 ஆயிரத்து 62 பேர் குணமடைந்துள்ளனர். ஆயிரத்து 41 நோயாளிகள் தொடர்ந்து சிகிச்சையில் இருக்கின்றனர்.

எந்தவிதமான அறிகுறியும் இல்லாத நிலையில் 44 பேருக்கு கரோனா தொற்று இருப்பது சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை 186 வெளிநாட்டினர் உள்பட 999 பேருக்கு அறிகுறி இல்லாத நிலையில் கொரோனா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள முதியோருக்கு ஹாரி - மேகன் உதவி



இங்கிலாந்து அரச குடும்பத்தில் இருந்து விலகுவதாக அறிவித்த ஹாரி - மேகன் தம்பதியினர் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட அமெரிக்க முதியவர்களுக்கு - வீடு வீடாகச் சென்று உணவு வழங்கினர்.

இங்கிலாந்து அரச குடும்பத்தில் இருந்து விலகுவதாக அறிவித்த ஹாரி - மேகன் தம்பதி, தங்களது மகன் ஆர்ச்சியுடன் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் குடியேறினர்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவல் வேகமெடுக்க தொடங்கியதால், இந்தத் தம்பதி கடந்த மாத இறுதியில் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு மாறினர். அங்கு மேகனின் சொந்த ஊரான கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அவர்கள் குடியேறினர்.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வீடுகளிலிருந்து வெளியே வர இயலாத முதியவர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஹாரி - மேகன் தம்பதி வீடுதேடி சென்று உணவு பொட்டலங்களை வழங்கி வருகின்றனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் செயல்பட்டுவரும் 'பிராஜெக்ட் ஏஞ்சல் புட்' என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து அவர்கள் இந்தச் சேவையை செய்து வருகின்றனர்.

மிகவும் சாதாரணமாக ஜீன்ஸ் பேண்ட், டி சர்ட் மற்றும் தொப்பி அணிந்திருக்கும் இருவரும் வீடு வீடாகச் சென்று, உணவு பொட்டலங்களை வழங்குகின்றனர்.

உணவை பெறும் நபர்களிடம் அவர்களுக்கு உணவு வழங்க வரப்போவது யார் என்று தெரிவிக்கப்படவில்லை.

மேலும் ஹாரியும், மேகனும் முகக் கவசம் அணிந்து உணவுப் பொட்டலங்களை விநியோகித்ததால் பெரும்பாலான நபர்கள் அவர்களை அடையாளம் காணவில்லை.

எனினும் உணவு வழங்கும் போது, அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான ஹாரி - மேகனின் புகைப்படங்கள் இணையத்தில் வேகமாகப் பரவி வருகின்றன.

## ஆப்கானிஸ்தான் ஆயுத மோதலில் தலிபான்கள் உட்பட 14 பேர் சாவு!



காபூல், ஏப்ரல் 21

ஆப்கானிஸ்தானில் அரசு ஆதரவு குழுவினருக்கும் தலிபான்களுக்கும் இடையே நடந்த மோதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. நாட்டின் சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான்கள் அரச மற்றும் அமெரிக்கப் படையினரைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இராணுவத்திற்கு உதவியாகவும் ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதரவாகவும் சில குழுக்கள் தலிபான்களுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

இந்த குழுக்களுக்கும் தலிபான்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடந்து வருகின்றது.

பால்ஹ் மாகாணம் சோல்ஹரா மாவட்டத்தில் உள்ள டல்லன் என்ற கிராமத்திற்குள் சனிக்கிழமை நுழைந்த தலிபான்கள் அரசுப் படையினருக்கு ஆதரவாகச் செயல் பட்ட குழுவினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். அரசு ஆதரவு குழுவினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த இந்தச் சண்டையில் அரசு ஆதரவு குழுவினர் 9 பேர், தலிபான்கள் 5 பேர் என மொத்தம் 14 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

# ஊரடங்கை மீறிய 2.5 லட்சம் பேர் கைதாகி பிணையில்

சென்னை, ஏப்ரல் 21

இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவை மீறி வாகனங்களில் வெளியே சுற்றிய 2 லட்சத்து 50 ஆயிரத்து 230 பேர் தமிழ்நாட்டில் மட்டும் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக தமிழகம் முழுவதும் 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. இந்த உத்தரவை மீறி தேவை இல்லாமல் வாகனங்களில் ஊர் சுற்றுபவர்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். பலரைக் கைது செய்துமிருக்கிறார்கள். அவர்கள் சென்ற வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

கைதானவர்கள் போக மேலும் 2 லட்சத்து 35 ஆயிரத்து 164 பேர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2 லட்சத்து 11 ஆயிரத்து 467 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஒரு கோடியே 26 லட்சத்து 31 ஆயிரத்து 894 இந்திய ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டதாகவும் பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# சேலம் அம்மா உணவகங்களில் காலை, மதிய உணவு இலவசம்

## செலவை அதிமுக பொறுப்பேற்கும் என முதலமைச்சர் அறிவிப்பு

சேலம் மாவட்டத்தில் உள்ள 15 அம்மா உணவகங்களிலும் அ.தி.மு.க. சார்பில் இன்று முதல் காலை மற்றும் மதியம் இலவச உணவு வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

தமிழக முதல் அமைச்சரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பாகக் கூறியிருப்பதாவது:-

சேலம் மாநகராட்சியில் 11 இடங்களில் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாவட்டத்தில் ஆத்தூர், நரசிங்கபுரம், எடப்பாடி, மேட்டூர் ஆகிய 4 நகராட்சிகளிலும் என மொத்தம் 15 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இங்கு சூடான, தரமான, சுவையான காலை டிபன் மற்றும் மதியம் 3 வகையான கலவை சாத வகைகள் அரசு நிர்ணயித்த மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த உணவகங்களில் பெரும்பாலும் கூலித்தொழிலாளர்கள் மற்றும் வசதி குறைவான ஏழை, எளிய மக்கள் உணவருந்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக, அவர்கள் போதிய வருமானம் இன்றி உள்ளனர். எனவே அவர்களுக்கு உதவும் வகையில், அ.தி.மு.க. சார்பில் இன்று (திங்கட்கிழமை) முதல் சேலம் மாநகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் 11 அம்மா உணவகங்களிலும், ஆத்தூர், நரசிங்கபுரம், எடப்பாடி, மேட்டூர் ஆகிய 4 நகராட்சிகளில் உள்ள அம்மா உணவகங்களிலும் காலை மற்றும் மதிய வேளைகளில் உணவருந்தும் அனைவருக்கும் இலவச உணவு வழங்கப்படும். இதற்கான செலவை சேலம் புறநகர் மற்றும் மாநகர் மாவட்ட அ.தி.மு.க. ஏற்றுக் கொள்ளும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# திருமணத்திற்காக 850 கி.மீ. சைக்கிளில் வந்த மணமகன்

## இடையில் பொலிஸில் மாட்டி தனிமைப்படுத்தல் முகாமில்

பஞ்சாபில் இருந்து உத்தரபிரதேசத்துக்கு தனது திருமணத்துக்காக சைக்கிளில் 850 கி.மீ. தொலைவுக்கு நண்பர்களுடன் பயணித்து வந்த மணமகன் பொலிஸில் சிக்கினார். அவர்கள் தனிமைப்படுத்தும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

உத்தரபிரதேச மாநிலத்தில் நேபாள எல்லை அருகே அமைந்துள்ள மகராஜ்கஞ்ச் மாவட்டம், பிப்ரா ரசூல்பூரை சேர்ந்தவர், சோனு குமார் சவுகான் (வயது 24).

இவர் பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் உள்ள தள செங்கல் (டைல்ஸ்) தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கு ஏப்ரல் 15ஆம் திகதி, சொந்த ஊரில் திருமணம் நடத்த பெரியவர்கள் நிச்சயம் செய்தனர். அதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து வந்தன.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க இந்தியா முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், எல்லா போக்குவரத்து சாதனங்களும் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து லூதியானாவில் இருந்து உத்தரபிரதேசத்தில் உள்ள சொந்த ஊருக்குத் தனது 3 நண்பர்களுடன் சைக்கிளில் புறப்பட்டார். எல்லோரும் இரவு, பகலாகச் சைக்கிள் மிதித்து 850 கி.மீ. தொலைவுக்கு வந்து விட்டனர்.

12ஆம் திகதி, உத்தரபிரதேச மாநிலம் பலராம்பூர் மாவட்ட எல்லைக்கு வந்தபோது அவர்களுக்கு சோதனை, பொலிஸ் வடிவில் வந்தது.

அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், விசாரணைக்குப் பின்னர் அங்குள்ள தனிமைப்படுத்தும் முகாமுக்கு அனுப்பினர்.

இதையடுத்து மணமகன் சோனு குமார் சவுகானும், அவரது 3 நண்பர்களும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

லூதியானாவில் இருந்து நாங்கள் சைக்கிளில் புறப்பட்டு 850 கி.மீ. தொலைவுக்கு வந்து விட்டோம். இங்கிருந்து எங்கள் ஊர் 150 கி.மீ. தொலைவில்தான் இருக்கிறது. ஆனால் இங்கு பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டோம். அதனால் எங்களைத் தனிமைப்படுத்தும் முகாமில் வைத்து விட்டனர். இரு வாரங்கள் இங்கு கண்காணிப்பில் வைத்திருப்பார்கள். எங்களை அனுமதித்திருந்தால் நிச்சயிக்கப்பட்டபடி எனது திருமணம் நடந்திருக்கும். எந்தவித ஆரவாரமும் இன்றி அமைதியாகக்கூடக் நடத்தி இருப்போம். ஆனால் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் பொலிஸார் எங்களை அனுமதிக்கவில்லை என்று வேதனையுடன் குறிப்பிட்டார் சோனு குமார் சவுகான்.

திருமணத்திற்காக 850 கி.மீ. சைக்கிளில் வந்த மணமகன்

இடையில் பொலிஸில் மாட்டி தனிமைப்படுத்தல் முகாமில் பஞ்சாபில் இருந்து உத்தரபிரதேசத்துக்கு தனது திருமணத்துக்காக சைக்கிளில் 850 கி.மீ. தொலைவுக்கு நண்பர்களுடன் பயணித்து வந்த மணமகன் பொலிஸில் சிக்கினார். அவர்கள் தனிமைப்படுத்தும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

உத்தரபிரதேச மாநிலத்தில் நேபாள எல்லை அருகே அமைந்துள்ள மகராஜ்கஞ்ச் மாவட்டம், பிப்ரா ரசூல்பூரை சேர்ந்தவர், சோனு குமார் சவுகான் (வயது 24).

இவர் பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் உள்ள தள செங்கல் (டைல்ஸ்) தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கு ஏப்ரல் 15ஆம் திகதி, சொந்த ஊரில் திருமணம் நடத்த பெரியவர்கள் நிச்சயம் செய்தனர். அதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து வந்தன.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க இந்தியா முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், எல்லா போக்குவரத்து சாதனங்களும் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து லூதியானாவில் இருந்து உத்தரபிரதேசத்தில் உள்ள சொந்த ஊருக்குத் தனது 3 நண்பர்களுடன் சைக்கிளில் புறப்பட்டார். எல்லோரும் இரவு, பகலாகச் சைக்கிள் மிதித்து 850 கி.மீ. தொலைவுக்கு வந்து விட்டனர்.

12ஆம் திகதி, உத்தரபிரதேச மாநிலம் பலராம்பூர் மாவட்ட எல்லைக்கு வந்த போது அவர்களுக்கு சோதனை, பொலிஸ் வடிவில் வந்தது.

அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், விசாரணைக்குப் பின்னர் அங்குள்ள தனிமைப்படுத்தும் முகாமுக்கு அனுப்பினர்.

இதையடுத்து மணமகன் சோனு குமார் சவுகானும், அவரது 3 நண்பர்களும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

லூதியானாவில் இருந்து நாங்கள் சைக்கிளில் புறப்பட்டு 850 கி.மீ. தொலைவுக்கு வந்து விட்டோம். இங்கிருந்து எங்கள் ஊர் 150 கி.மீ. தொலைவில்தான் இருக்கிறது. ஆனால் இங்கு பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டோம். அதனால் எங்களை தனிமைப்படுத்தும் முகாமில் வைத்து விட்டனர். இரு வாரங்கள் இங்கு கண்காணிப்பில் வைத்திருப்பார்கள். எங்களை அனுமதித்திருந்தால் நிச்சயிக்கப்பட்டபடி எனது திருமணம் நடந்திருக்கும். எந்தவித ஆரவாரமும் இன்றி அமைதியாகக் கூடக் நடத்தி இருப்போம். ஆனால் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் பொலிஸார் எங்களை அனுமதிக்கவில்லை என்று வேதனையுடன் குறிப்பிட்டார் சோனுகுமார் சவுகான்.

# வீடே நமது அலுவலகம் இணையமே சந்திப்பறை

## புதிய கலாசாரம் பற்றி இந்திய பிரதமர் மோடி கருத்து



டெல்லி, ஏப்ரல் 21

கொரோனாவால் அனைவரின் வாழ்க்கை முறையும் மாறிவிட்டதாகக் கூறியிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நம் வீடே அலுவலகமாகவும் இணையத் தளமே சந்திப்பு அறையாகவும் மாறி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தனது சமூக வலைத்தள பக்கத்தில் இது குறித்து நேற்றுக் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரசால் நாம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகிறோம். அனைவரின் வாழ்க்கை முறையும் மாறி உள்ளது. இப்போதெல்லாம் நமது வீடே அலுவலகமாகவும், இணையதளமே சந்திப்பு அறையாகவும் திகழ்கிறது.

நானும் இந்த மாற்றங்களுக்கு ஏற்ப என்னை மாற்றி கொண்டுள்ளேன். எனது அமைச்சரவைச் சகாக்களானாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி, உலக தலைவர்களானாலும் சரி, எல்லாரிடமும் காணொலி காட்சி (வீடியோ கொன்பரன்ஸிங்) மூலம்தான் சந்திப்பை நடத்துகிறேன். இதன்மூலம், சிக்கலான தருணங்களில்கூட நமது அலுவலகங்கள், வர்த்தகம் ஆகியவை வேகமாக இயங்க முடியும் என்பது தெளிவாகிறது.

இன்று உலகமே வர்த்தக முன்னுதாரணத்தை தேடி ஓடிக் கொண்டிருக்கிறது. கண்டுபிடிப்புகளுக்கு பெயர் போன இளம் இந்தியா, புதிய பணி கலாசாரத்துக்கும் தலைமை தாங்க முடியும்.

கொரோனாவுக்கு பிந்தைய சூழ்நிலையில், நவீன பன்னாட்டு பொருள் விநியோக சந்தையில் உலகளாவிய மையமாக இந்தியா திகழ முடியும். இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும். அதிகாரிகள் ஆதிக்கம், இடைத்தரகர் தலையீடு ஆகியவற்றை நீக்கி, நலப்பணிகளை விரைவுபடுத்துவது தொழில்நுட்பமே ஆகும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## ஊரடங்கின் விளைவாக

# அரிசி இல்லாததால் ராஜநாகத்தை வேட்டையாடி உண்ட கிராமத்தவர்



இந்தியாவில் ஊரடங்கு உத்தரவால் உணவு கிடைக்காமல் காட்டில் ராஜநாகத்தை வேட்டையாடி உண்ட மூவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ராஜநாகம் இந்தியச் சட்டத்தில் பாதுகாக்கப்பட்ட ஊர்வன வகை விலங்கினமாகும், இதனை வேட்டையாடினால் பிணையில் வெளிவர முடியாத சிறைத்தண்டனைதான் கிடைக்கும்


ஆனாலும் அருணாச்சலப் பிரதேசத்தில் ராஜநாகத்தை வேட்டையாடி அதனை தோள்மீது போட்டுக்கொண்டிருக்கும் மூவர் குறித்த வீடியோ ஒன்று சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

தாம் பிடித்த ராஜ நாகத்தை உணவாக்குவதற்காகப் பெரிய வாழை இலையில் அதனை வெட்டிச் சமைப்பதற்கு அவர்கள் ஆயத்தமாவதும் காணொலியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கால் சமைப்பதற்கு அரிசி இல்லாததால் காட்டுக்குச் சென்றபோது ராஜநாகத்தை பிடித்தோம் என்று அந்த மூவரில் ஒருவர் காணொலியில் தெரிவிக்கின்றார்.

"உணவு இல்லாததையடுத்துக் காட்டுக்குச் சென்றோம். அங்கு இதைப் பார்த்தோம், பிடித்தோம்" என்று அவர்கள் காணொலியில் கூறியுள்ளனர்.

அருணாச்சலப் பிரதேசத்தில் பாம்பு வகைகள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
(சமூகவியல் சிறப்புக்கலை,
மூன்றாம் வருடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.)

# ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மாறாத அவலத்துடன் ஓராண்டு நிறைவு

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இயற்கை அழகு மற்றும் செழிப்பான பன்முகக் கலாசாரம் என்பவற்றின் காரணமாக உலகம் முழுவதும் இருந்து வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்த ஓர் அழகிய நாடு எமது இலங்கையாகும்.

சிங்களவர், தமிழர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் ஏனைய இன மக்களையும், பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய சமயத்தை பின்பற்றும் மக்களையும் கொண்ட ஒற்றுமையும், சமாதானமும் நிறைந்த திருநாடாக விளங்குகின்றது. எமது நாட்டில் ஏப்ரல் மாதம் என்றாலே கொண்டாட்டமும், குதூகலமும் நிறைந்து காணப்படும். ஆனால் சென்ற வருடத்தில் இருந்து அனைவரையும் ஆழ்ந்த துயரத்திற்கு மத்தியில் கொண்டு சென்று அழகிய நாட்டை அலங்கோலமாக்கிய, சிதைத்து சின்னாபின்னாபின்னமாக்கிய கோரச் சம்பவம் எமது நாட்டில் ஏற்பட்டது. அதுவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலாகும்.

இதனாலேயே எமது நாட்டில் பண்டிகை மாதமான ஏப்ரல் பரிதாபமான மாதமாக மாறியது.

இலங்கை நாட்டினுடைய வரலாற்றில் இரத்த வெள்ளம் ஆறாய்ப் பாய்ந்து ஓடிய மறக்க முடியாத நாளாக 21.04.2019 காணப்படுகின்றது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தினை பாவத்தில் இருந்து மீட்பதற்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த நாளையே கிறிஸ்தவ மக்கள்



உயிர்ப்புப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். இந்த பண்டிகை நாள் அன்றே தற்கொலைக் குண்டுத்தாரிகளாலும், ஒரு சில அடிப்படைவாத சிந்தனையுடையவர்களாலும் எமது நாட்டில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டது.

இதனாலேயே இத் தாக்குதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என அழைக்கப்படுகின்றது. உலகமே திரும்பிப் பார்க்க வைத்த கொடூர சம்பவமாக இத் தாக்குதல் அமைந்தது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் காலை 08:25 மணியளவில் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியன் ஆலயத்திலும், காலை 08:45 மணியளவில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும், காலை 09:05

மணியளவில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும், காலை 09:15 - 09:20 மணியளவில் சினமன் கிராண்ட் உணவகம், கிங்ஸ்பரி உணவகம், சங்கிரிலா உணவகம் போன்ற நட்சத்திர விடுதிகளிலும், பிற்பகல் 02:20 மணியளவில் தெஹிவளை விலங்கியல் பூங்காவிற்கு அருகிலும், பிற்பகல் 02:15 மணியளவில் தெமட்டகொட வீடொன்றிலும் இடம்பெற்றன.

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எட்டு இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட போது கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு ஞாயிறு வழிபாட்டு ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்தார்கள்.

அதேபோன்று உணவகங்களில் காலை உணவை அருந்துவதற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் உள்நாட்டினரும் கூடியிருந்த வேளை இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டது. சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள், சமையல் நிபுணர், தொழிலதிபர், வெளிநாட்டு அரசியல்வாதிகள், கட்சி உறுப்பினர்கள் போன்றோரின் உடல்கள் சிதைந்து சின்னாபின்னமாயின.



இந்த தாக்குதல்களில் ஒன்பது தற்கொலைதாரிகள் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கையர்களாகவும், தேசிய தௌஜீத் ஜமாத் என்ற உள்ளூர் அடிப்படைவாத இஸ்லாமிய ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். இந்த தாக்குதல் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பொன்றின் போதைனைகளில் ஈர்க்கப் பட்ட எம் நாட்டு இஸ்லாமிய இளைஞர்கள் பலர் தங்களுக்குள் ஒரு வலையமைப்பை ஏற்படுத்திக் கொண்டு மிகவும் கட்டமைக்கப் பட்டரீதியில் இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களை முன்னெடுத்தனர். இதன் தலைவராக முகம்மது ஹறான் செயற்பட்டார்.

இந்த தாக்கதலில் அனேக உயிர் கள் பலியாகின. இந்த தாக்குதலினால் 250 மேற்பட்டோர் உயிரிழந்தனர். 500 மேற்பட்டோர் காய மடைந்தனர். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நபர்களுள் சிலர் உயிரிழந்த வண்ணமே காணப் படுகின்றனர். இந்த தாக்குதலி னால் இலங்கையர் மட்டுமன்றி வெளிநாட்டி லிருந்து சுற்றுப் பணயம் மேற்கொண்ட சுற் றுலாப்பயணிகளும் உயிரிழந்தனர். குறிப்பாக இந்தியா, சீனா, டென்மார்க், சவூதி அரேபியா, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், துருக்கி, வங்காளதேசம், ஜப்பான், போத்துக்கல், ஐக்கிய அமெரிக்கா, சுவிட்ஸர் லாந்து போன்ற நாடுகளில் இருந்து வந்த 42 வெளிநாட்டுப் பிரஜைகள் உயிரிழந் தமையோடு, 37 பேர் காயமடைந்தனர் என் பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வாறானதொரு தாக்குதல் இலங்கையில் நடந்து முடிந்ததற்கு, இதற்கு முன்னர் ஆட்சியில் காணப்பட்ட அரசாங்கத்தின் அலட்சியப்போக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். தீவிரவாத இஸ்லாமிய அமைப்பான தேசிய தௌஜீத் ஜமாத் இலங் கையில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனஎனத் தாக்குதல் நடத்தப் படுவதற்கு பத்து நாள்களுக்கு முன்னமே செய்தி வெளியாகி இருந்தது. அத்தோடு சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புகளை ஏற்படுத்தயபடி, இலங்கையிலும் பயங்கராவதக் குழுவொன்று உருவாகி வருவதாக தகவல்கள் வெளியாகி இருந்தது. ஆனால் இவ்வாறான தகவல்கள் வெளியாகி இருந்த போதிலும் முன்னைய அரசாங்கம் அதனை ஒரு பொருட்டாக எண்ணாமல் அலட்சியமாக விட்டுவிட்டதன் விளைவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலாக வெடித்தது. முன்னைய அரசாங்கம் தகவல்கள் வெளியாகி இருந்தும் அதற்கான தகுந்த

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்திளை பாவத்தில் இருந்து மீட்பதற்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த நாளையே கிறிஸ்தவ மக்கள் உயிர்ப்புப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். இந்த பண்டிகை நாள் அன்றே தற்கொலைக் குண் டுத்தாரிகளாலும், ஒரு சில அடிப்படைவாத சிந்தனையுடையவர்களாலும் எமது நாட்டில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டது.

நடவடிக்கையினை எடுத்திருந்தால் இவ்வாறானதொரு கோரச் சம்பவத்தை தடுத்திருக்கலாம்.

இந்த குண்டுத் தாக்குதலினால் எமது நாட்டினுடைய பல துறைகள் முடக்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லப்போனால் சுற்றுலாத்துறை அதிகம் பாதிப்படைந்தது எனலாம். எமது நாட்டிற்கு சுற்றுலாத்துறை மூலமே அன்னிய செலாவணி கிடைக்கின்றது.

வெளிநாட்டுப்பயணிகள் தங்கள் விடுமுறையினைக் கழிப்பதற்காக எமது நாட்டிற்கு வருகைதந்த வண்ணம் காணப்பட்டனர். ஆனால் இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தினால் சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்பட்டது. சராசரியாக நாளாந்தம் 1700 சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர். ஆனால் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு முன்னர் 4600 பேர் வருகை தந்தனர். இந்தக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து 37 நாடுகள் இலங்கைக்குப் பயண எச்சரிக்கையை விடுத்திருந்தன.

2018ஆம் ஆண்டு 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். ஆனால் 2019 ஆண்டு குண்டுவெடிப்பினால் 30 சதவீத வீழ்ச்சியை எமது நாடு சந்திக்க நேரிட்டது. இது எமது நாட்டிற்கு கிடைத்த மாபெரும் இழப்பு என்று கூறலாம். இச் சம்பவத்தினால் இலங்கை நாட்டின் மீது சர்வதேச நாடுகள் மத்தியில் நம்பிக்கையிழந்த தன்மை காணப்பட்டது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுத் ....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டிலிருந்த வெளிநாட்டினர் எவ்வித அறிவிப்புமின்றி நாட்டிலிருந்து வெளியேறிச்சென்றனர். இதனால் இலங்கை நாடு அபாய நிலைக்குள்ளான நாடு என்ற அடையாளத்தை சர்வதேச மட்டத்தில் பெற்றிருந்தது கவலை தருகின்ற விடயமாகும்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் குடும்ப உறவினர்கள் மற்றும் ஏனைய உறவினர்களையும் இழந்து தவிப்போரின் உள்ளக்காயங்களை யாராலும் மாற்ற இயலாது. அவர்கள் தங்களது துயரத்தை சுமந்தபடி நடைப்பிணமாகத் திரிகின்றனர். இந்தக் கொடூர சம்பவத்தைத் தொடர்ந்து வரலாற்றில் இல்லாத அளவிற்கு முஸ்லீம் மக்கள் பயந்து நடக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அவர்களை சந்தேக கண்ணோட்டத்திலே அனைவரும் பார்த்தனர். இந்த செயற்பாடு மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒரு சில முஸ்லிம்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த முஸ்லீம் மக்களையும் குற்றவாளியாகக் கருதுவது தவறானதோர் விடயமாகும்.

எனவே இன்றுடன் சம்பவம் நடைபெற்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாத கருத்துக்களைப் பரப்பும் குழுக்கள் நாட்டில் இருக்கின்றபோதிலும், அதற்கு எடுபடாமல் இலங்கையராகிய நாம் ஒவ்வொருவரும் தமது மத மற்றும் கலாசார சம்பிரதாயங்களை முறையாகப் பின்பற்றுவதில் அக்கறை கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எம்மவர் கற்றுக் கொண்ட பாடங்கள் அனேகமாயிருந்தாலும், குறிப்பிட்டதொரு இனத்தினை புறக்கணிப்பது என்பது ஆரோக்கியமான விடயமன்று. நெருக்கடியான சூழலில் அறிவார்ந்த ரீதியில் செயற்பட வேண்டும். எம் அழகிய திருநாட்டில் சென்ற வருடம் நடைபெற்றது போன்ற கொடூர சம்பவம் இனிவரும் காலங்களில் ஏற்படாத வண்ணம் சிந்தித்து செயற்படுவது எம் அனைவரினதும் மிக முக்கிய கடமையாகும். அத்தோடு இலங்கை வாழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தும் வகையில் ஒற்றுமையாகவும், சகோதர உணர்வோடும் வாழவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாய் அமைகின்றது.

## வாழைச்சேனை முஸ்லிம் பெண் லண்டனில் கொரோனாவில் பலி



மட்டக்களப்பு வாழைச்சேனையை பிறப்பிடமாகவும் லண்டன் ஈஸ்ட் ஹாம் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட மிஹ் ராஜியா முஹைதீன் என்பவர் கொவிட் 19 காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுத் திங்கட்கிழமை லண்டனில் மரணமடைந்துள்ளார் என லண்டனில் வசிக்கும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

கொவிட் 19 நோய் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு வாரங்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று வைத்தியசாலையில் மரணமடைந் துள்ளார்.

மிஹ்ராஜியா முதியோர் காப்பகத்தில் பணிபுரிந்தார். அங்கு கடமை புரியும் போதே அவருக்கு கொவிட் 19 வைரஸ் தொற்றியது.

இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளைகளுமாக மூன்று பிள்ளைகளின் தாயான மிஹ்ராஜியா முஹைதீன் வாழைச்சேனையைச் சேர்ந்த முபாரக்கை திருமணம் செய்து லண்டனுக்கு வசிப்பதற்கு சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் தலைவர்
Rtn Dr. அ.ஜெயகுமரன் அவர்களின் அன்புப் பேரனார்

**வேலுப்பிள்ளை நாகலிங்கம்**
(ஓய்வு பெற்ற புகையிரத சாரதி)

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் நாடுகிறோம்.
ஓம் சாந்தி!

யாழ்ப்பாண றோட்டறிக் கழக நண்பர்கள்



# மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 07 - 1947



இறப்பு 20 - 04 - 2020

அமரர்
**காஞ்சனாதேவி துரைசிங்கம்**

யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதி, பாணாங்குளத்தை சேர்ந்த துரைசிங்கம் காஞ்சனாதேவி நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் வேலுப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதிகளின் மகளும், சி.துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், ரஞ்சிதாதேவி, அற்புதாதேவி ஆகியோரின் சகோதரியும், ஆதவன் (ஜேர்மன்), வாகீசன் (ஆசிரியர், யாழ் பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தயாராருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

260/1, கச்சேரி - நல்லூர் வீதி,
பாணாங்குளம்,
யாழ்ப்பாணம்

தகவல்
மகன் வாகீசன்
(0779134524)



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு
சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின்
கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மருத்துவத் தரப்பின் ஆலோசனையை அரசு உதாசீனம் செய்கின்றமை மிக ஆபத்தானது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம்

கொழும்பு, ஏப்ரல் 21

அரசாங்கம் மருத்துவ சங்கத்தின் அறிவுரையை உதாசீனம் செய்வது ஆபத்தானதும், கண்டிக்கத்தக்கதும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலை இன்னும் நீங்கவில்லை. வழமைநிலைதிரும்பவில்லை. உலகளாவிய ரீதியில் உயிரிழப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இலங்கையிலும் கொறோனா நோய்த் தொற்றாளர்கள் இனம்காணப்பட்டவண்ணம் உள்ளனர். இன்னும் பலர் பரிசோதனை செய்யப்படாத நிலையில் மறைந்தும் உள்ளனர் என மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதனை முழுவதுமாக ஆராய்ந்து உணர்த்தும் கடமை முழுக்க முழுக்க மருத்துவத் துறைக்கே உரியது. அத்தகைய மருத்துவ சங்கத்தின் அறிவுரையை மீறி ஊரடங்கைத் தளர்த்துவது மிகப்பெரும் ஆபத்தாகும்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டவுடன் மக்கள் அலை அலையாக தங்கள் தேவைகளை நிறைவேற்ற வெளியில் வருவது தவிர்க்க முடியாததாகும். தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் வெளியில் வந்தே ஆக வேண்டும். அதனை விடுத்து தேவைகளை நிறைவு செய்ய இந்த நாட்டில் மாற்று வழியில்லை.

இதற்கு மாற்றீடாக கனடா போன்ற நாடுகளில் நடைபெறுவதுபோன்று மக்களை வீடுகளில் இருக்கச் சொல்லி அவர்களுக்குத் தேவையானவற்றை அவர்களின் இருப்பிடத்திற்கு கொண்டு சென்று வழங்குவது இங்கு இல்லை. இது இந்த நாட்டில் சாத்தியப்படாத ஒன்று. காரணம் வீடுவீடாகச் சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற கிராம அலுவலர்கள் எந்தவிதமான பாதுகாப்பு அங்கிகளுமின்றி தமது பணியைச் செய்வதனை நாம் கண்டிருக்கின்றோம். அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் உள்ளன.

உதாரணமாக அரசாங்க ஊழியர்கள் வங்கிகளில் பெற்றுக் கொண்ட கடனை இந்த இடர்க்காலங்களில் செலுத்தத் தேவையில்லை என்று அரசாங்கம் அறிவித்தது. ஆனால் சில வங்கிகள் அரச ஊழியர்களிடம் கடனை முழுவதுமாக அறவீடு செய்துள்ளன.

இதே வேளை ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளை சில பெற்றோர்கள் தமது குழந்தைகளுடன் வெளியில் வந்ததைக் காணக்கூடியதாக உள்ளது. காரணம் அக்குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டு வெளியில் செல்லமுடியாத நிலை.

இவை எல்லாம் மிகவும் அபாயகரமானவை. இவற்றைக்கருத்தில்கொண்டே மருத்துவ சங்கம் அரசாங் கத்திற்கு ஊரடங்கை நீக்கவேண்டாம் என ஆலோசனை வழங்கியது.

அதனை உதாசீனம் செய்து வேறு காரணங்களுக்காக அரசாங்கம் ஊரடங்கை நீக்கியிருப்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதுமட்டுமன்றி வரப்போகும் ஆபத்தினை முழுக்க முழுக்க சந்திக்கும் ஆற்றல் மருத்துவத்துறைக்கு மட்டுமே உள்ளது. ஆகையால் இந்நாட்டின் மக்களையும், மதிப்பு மிக்க மருத்துவர்களையும், அத்துறைசார்ந்த ஊழியர்களையும் கருத்தில் கொண்டு மருத்துவ சங்கத்தின் ஆலோசனைக்கு மதிப்பளிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஊரடங்கில் புதையல் தோண்டிய பிக்கு உட்பட நான்கு பேர் கைது

ஊரடங்கு சமயத்தில் அஹுங்கம பிரதேசத்தில் புதையல் தோண்டிய பௌத்த பிக்கு ஒருவர் உள்ளிட்ட நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர்கள் புதையல் தோண்டுகின்றனர் எனக் கிராம மக்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் நேற்று முன்தினம் மாலை அவர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குழி தோண்டிக் கொண்டிருந்த போது காவல்துறையினர் அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

புதையல் தோண்டப் பயன்படுத்தப் பட்ட ஆயுதங்கள் மற்றும் வாகனம் என்பனவற்றையும் காவல்துறையினர் கைப் பற்றியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பௌத்த பிக்கு கடுவல பிரதேச விஹாரை ஒன்றைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட நபர்கள் ஒரு மாத காலம் அஹுங்கம பகுதியில் தங்கியிருந்தனர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் நாளைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முழுவதிலும் கடுமையான விதிகள் பின்பற்றப்பட்டுவரும் நிலையில் இந்த பௌத்த பிக்கு உள்ளிட்டவர்கள் இவ்வாறு புதையல் தோண்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்களின் தேவைக்கு நீங்களே பயிரிடுங்கள்!




வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளும் விற்பனைக்கு உண்டு.

வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குரங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்ரூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=
சிறகவரை 200/=
கறிமிளகாய் 200/=

மிளகாய் - 50 நாற்றுகள் - 200/=
கத்தரி - 50 நாற்றுகள் - 250/=
தக்காளி - 50 நாற்றுகள் - 300/=



வீட்டில் போதிய இடம் இல்லாதவர்கள் சாடிகளிலும் பயிரிடலாம்.
சாடி பெரியது - விட்டம் 34cm - 250/=
சாடி சிறியது - விட்டம் 28.5cm - 170/=
முள்ளுவிறாண்டி = 250/=, 400/=





யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

உங்களின் வீடுகளிற்கு விநியோகிக்கப்படும்.

விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

தொடர்புகளுக்கு: - 077 411 4422
www.yarlmuttam.com

# முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டமையால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுத்திருக்கலாம்

## முதலாண்டு நினைவு நாள் செய்தியில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.21

**கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனவே இந்த தாக்குதலை எளிதில் தடுத்திருக்க முடியும்.**
**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

மேற்படி தாக்குதலின் ஓராண்டு இன்று நிறைவு பெறுகின்றமையை ஒட்டி தாம் விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஞாயிற்றுக்கிழமை - 21 ஏப்ரல் 2019 அன்று, மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொழும்பில் உள்ள மூன்று முக்கிய ஹோட்டல்களில் தற்கொலை குண்டுவெடிப்பில் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மற்றும் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலோர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாட தேவாலயங்களில் கூடியிருந்த வழிபாட்டாளர்கள்.

இது ஆசியாவில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் மீதான மிக மோசமான பயங்கரவாத தாக்குதலாகும்.

1995 ஆம் ஆண்டு டோக்கியோ விஷவாயு தாக்குதல், 1995 ஓக்லஹோமா நகர குண்டுவெடிப்பு, 2005 லண்டன் குண்டுவெடிப்பு மற்றும் 2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதல்கள் ஆகியவை சர்வதேச அளவில் நினைவில் உள்ளன. இவை அனைத்தும் இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பை விட குறைவான அளவு இழப்பையே சந்தித்தன.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பலியான ஒருவர் கிட்டத்தட்ட ஒரு வருடம் உயிருக்கு போராடிய பின்னர் சமீபத்தில் இறந்தார். பல பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் காயங்களுக்கு இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் நாங்கள் தற்கொலை குண்டுவெடிப்பிற்கு புதியவர்கள் அல்ல. எவ்வாறாயினும், பிரிவினைவாதத்திற்கு எதிரான 30 ஆண்டுகால யுத்தத்தின் போது நாம் அனுபவித்தவற்றிலிருந்து ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு வேறுபட்டது.

ஒரு நட்பு நாட்டின் உளவுத்துறை சேவை அப்போதைய இலங்கை அரசாங்கத்திற்கு சாத்தியமான திகதிகள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தது.

தாக்குதலாளிகளின் இலக்குகள் மற்றும் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகளின் பெயர்கள், முகவரிகள், அடையாள அட்டை எண்கள் மற்றும் தொலைபேசி எண்கள் கூட வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்த தாக்குதலை எளிதில் தடுத்திருக்க முடியும்.

பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் விதமாக கொழும்பு பேராயர், அனைத்து கத்தோலிக்கர்களும் தங்கள் வீடுகளில் ஒரு விளக்கு ஏற்றி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களை தங்கள் சொந்த நம்பிக்கைகளுக்கு ஏற்ப நினைவில் கொள்ளுமாறு இலங்கையர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். - என்று உள்ளது.


# மரண அறிவித்தல்

தோற்றம்
07
03
1928

மறைவு
18
04
2020



## திருமதி ராதா அரியரத்தினம்


யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொழும்பு, சென்னை, தென் ஆபிரிக்கா, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ராதா அரியரத்தினம் அவர்கள் 18.04.2020 சனிக்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் நடராஜா (அரச சட்டத்தரணி, நகரசபைத் தலைவர் - அனுராதபுரம்) - காந்திமதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ராஜா அரியரத்தினம் (ஈழத்துப் பத்திரிகை உலகின் முன்னோடியும், ஈழகேசரி, ஈழநாடு, சிந்தாமணி பத்திரிக்கைகளின் ஆசிரியரும்) அவர்களின் அன்பு மனைவியும், சோபனா அவர்களின் அன்புத் தாயாரும், பேராயிரம்பிள்ளை முரளீதரன் அவர்களின் அன்பு மாமியும், ரம்யா, அபிராமி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர் களான மகாதேவா, பத்மநாதன், சத்தியபாமா, சகுந்தலா, வாமதேவா மற்றும் விமலா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நாகம்மா இராஜரட்ணம், மகேஸ்வரி, துரைசிங்கம், விமலாதேவி மற்றும் விமலோதயம், ஜெகநாதன், ராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
சோபனா - மகள்: +14168436153
முரளி - மருமகன்: +14169531464

தகவல்: குடும்பத்தினர்


# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்காக மைத்திரியிடம் வழங்கப்பட்ட 90 கோடி ரூபா நிதி எங்கே?

## ஓமல்பே சோபித்த தேரர் கேள்வி



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப உலக முஸ்லிம் லீக், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கிய 90 கோடி ரூபாவுக்கு என்ன நடந்ததென வண. ஓமல்பே சோபித்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு முன்னாள் மேல்மாகாண ஆளுநர் ஏ.ஏ.எம்.முஸம்மில் உள்ளிட்டவர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாகத்தில் உலக நாடுகளிலுள்ள முஸ்லிம் தலைவர் கலந்துகொண்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

இதன்போது உலக முஸ்லிம் லீக்கின் தலைவர் மொஹமட் பின் அப்துல்ல உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐம்பது லட்சம் டொலர்களை மைத்திரிபாலவிடம் அன்பளிப்பு செய்தார்.

இதற்குப் பின்னரும் பல நிதியுதவிகள் கிடைத்தன. எனினும் இந்த நிதி உரியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்த நிதிக்கு என்ன நடந்தது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவும் பதிலளிக்க வேண்டும். என்றார்.

# அடுத்த இரண்டு வாரங்களும் எச்சரிக்கையாக இருங்கள்!

## மருத்துவ நிபுணர் ஆலோசனை

கொவிட்' 19 வைரஸ் சமூகத்தில் வேகமாகப் பரவவில்லை என்றாலும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மக்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜெயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

மக்கள் சுகாதார பழக்கங்களைப் பின்பற்றாவிட்டால், அவர்கள் நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையில், கொழும்பின் பண்டாரநாயக்க மாவத்த வாழைத்தோட்டம் பகுதியில் உள்ள புதுக்கடை அருகே நேற்று அதிக எண்ணிக்கையான கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.






# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 1



படம் 2

**படம் 1**

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

**படம் 2**

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு - 'வைக்கோற் போர்'**

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'தாமரைக் குளம்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எம். ரக்ஷனா - தரம் 10
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

யதுஷி ரமேஷ் - தரம் 8
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

ரமேஷ் ரம்மியன் - தரம் 5
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எம். நஸீம் - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ச. அபினாஷ் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

அக்ஷா கீர்த்திராஜ் - தரம் 4
ஹற்றன் ஹைலாண்ட் கல்லூரி

ஏ. எஸ். எவ். மனால் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

லோ. சிவயானு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

டேவிராஜ் பிலெஷின் - தரம் 6
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தவேந்திரன் ஆஹர்ன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

எம். எவ். எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

எம். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

சேகி விஜயபாஸ்கர்
யா/ மகாஜனாக் கல்லூரி

மதுவந்தி மோகனராஜ் - ஜேர்மனி

ஸஅ. சஞ்சனா - தரம்
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

எம். சி. ஜோசுவா சொலொமன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

சி. சிவசங்கர் - தரம் 7
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சி. சிவப்பிரியன் - தரம் 3
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. வாஹினி - தரம் 4
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. கஜானி - தரம் 8
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

கே. பிரிதிவிகரன் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

ஜெயசாந்தன் வித்யாசாகர் - தரம் 2
யாழ். பரியோவான் கல்லூரி

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## வைக்கோற் போர்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (21/04/2020) தலைப்பு**
**வைக்கோற் போர்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# உணவுச்சாலைகள் பின்பற்ற வேண்டிய நடைமுறை ஒழுங்குகள் பற்றி அறிவிப்பு

**கொ**ரோனா தொற்று பரவுவதைத் தவிர்ப்பதற்கு உணவு வகைகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தற்பொழுது மிகவும் ஆபத்தாக கொரோனா தொற்று பரவிவருவதால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள உணவு கையாளும் ஒழுங்கு விதிகளை முற்றாக அமுல்படுத்துவதுடன் மேலதிகமாக கொரோனா தொற்றை தவிர்ப்பதற்காக கீழ் குறிப் பிடப்பட்ட நடைமுறைகளை தவறாது பின்பற்றுமாறு அவர்அறிவுறுத்தியுள்ளார்:-



1.உணவு கையாளும் நிலையத்தில் பின்பற்ற வேண்டிய கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளை வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்த வேண்டும்.

2.இயலுமானவரை உணவு வகைகளை வாங்கிச் சென்று உண்பதை ஊக்குவியுங்கள்.

3.உணவு கையாளும் நிறுவனத்தில் கடமையாற்றும் வேலையாள்கள் ஓடும் நீரில் சவர்க்காரமிட்டு சரியான முறையில் 20 செக்கன்களாவது கைகளைக் கழுவுவது உறுதி செய்யப்பட வேண் டும். உள் நுழையுமிடத்தில் வாடிக்கையாளர்கள் கைகளை கழுவுவதற்கான வசதி செய்யப்பட்டி ருக்க வேண்டும்.

4.உணவகத்தின் உள்ளே எப்போதும் இருவருக்கிடையில் 1 மீற்றர் அல்லது 3 அடி இடைவெளி யைப் பேணக் கூடியவாறாக இருக்கைகள் ஒழுங் கமைப்பட்டிருக்க வேண் டும்.

5.உணவு கையாளும் நிறுவனத்தில் கடமையிலுள்ள அனைவரும் முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

6.உணவு பரிமாறுபவர்கள் வாடிக்கையாளர்கள் கேட்கும் உணவை மாத்திரம் வழங்க வேண்டும்.

7.வாடிக்கையாளர் அமர்கின்ற இடத்தில் மேசையைத்துடைத்து தயார்ப்படுத்தல்,உணவுத் தட்டை கழுவுதல் உணவைத் தட்டில் வைத்து பரிமாறுதல் ஆகிய செயல்களை தனித்தனியான வேலையாள்களே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8.இவர்களை வாடிக்கையாளர்கள் அடையாளங் காணக்கூடியவாறாக வேறு வேறான சீருடைகளை அணிவது விரும்பத்தக்கது. ஒவ்வொரு வாடிக்கையாளரும் பயன்படுத்திய தளபாடங்கள் உடனடியாகவே தொற்று நீக்கி பாவித்து துடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. சிறிதளவேனும் காய்ச்சல், இருமல், தொண்டை நோ போன்ற கொரோனா தொற்றின் குணங் குறிகளுடைய வேலையாள்கள் எவரும் உணவு கையாளும் நிறுவனத்தினுள்ளோ வளவினுள்ளோ கடமையில் ஈடுபடலாகாது. என அறிவுறுத்தியுள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சரோஜா தம்பிப்பிள்ளை (புஷ்பராஜா)

தோற்றம் 02 05 1962



மறைவு 17 04 2020

யாழ். மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், டொரொன்டோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜா தம்பிப்பிள்ளை (புஷ்பராஜா) அவர்கள் 17.04.2020 வெள்ளிக்கிழமை அன்று கனடா நேரம் இரவு 11 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (இளையதம்பி வாத்தியார்) – தங்கமுத்து தம்பதிகளின் அன்பு பேத்தியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்) – திலகவதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மனுநீதி – லீலாவதி தம்பதிகளின் அன்பு மருமகளும், புஷ்பராஜா மனுநீதி அவர்களின் அன்பு மனைவியும், ஜினிதாவின் பாசமிகு தாயாரும், பிறேமா, ஜெயசீலன், அனுஷ்யாவின் அவர்களின் பாசமிகு சகோதரியும், காலம்சென்ற எஸ் மகேந்திரனின் மருமகளும் காலம்சென்ற கமலாதேவியின் பெறாமகளுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக குடும்ப உறவுகளோடு மட்டும் இறுதி நிகழ்வுகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு
கணவர் புஷ்பராஜா 416 756 2469

தகவல்: குடும்பத்தினர்


யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மக்களைக் கைவிட்டது இந்த அரசு

## தேசிய தாதியர் தொழிற்சங்க சம்மேளனம் காட்டம்

**கொழும்பு,ஏப்ரல்21**

**ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதற்காக பொதுத் தேர்தலை எப்படியாவது நடத்த வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டிவரும் ராஜபக்ஷ அரசாங்கம், மக்களின் பாதுகாப்பு விடயத்தைக் கைவிட்டுள்ளதாக தேசிய தாதியர் தொழிற்சங்க சம்மேளனம் குற்றம்சாட்டியுள்ளது.**

**இதனாலேயே கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் இன்னமும் முற்றாக நீங்காத நிலையில் சமூக இடைவெளியை பேணும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை நேற்று முதல் தளர்த்தியுள்ளதாக தேசிய தாதியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அவசர அவசரமாக பொதுத் தேர்தலை நடத்தும் முயற்சியை விடுத்து நாடாளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமெனவும் அதற்கு யாப்பில் அனுமதி இருப்பதாகவும் தேசிய தாதியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 27 ஆம் திகதி திங்கள் காலை 5.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ள போதிலும் ஏனைய மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த, யாழ்ப்பாணம், கண்டி மாவட்டங்களிலும் நேற்றைய தினம் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

இதற்கமைய யாழ்ப்பாணம் உட்பட 21 மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 24 வெள்ளிக்கிழமை வரை இரவு 8.00 மணி முதல் மறுநாள் காலை 5.00 மணி வரை மட்டுமே அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 24 வெள்ளி இரவு 8.00 மணிக்கு இம்மாவட்டங்களில் மீண்டும் அமுல்படுத்தப்படும் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 27 திங்கள் காலை 5.00 மணி வரை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த ஒரு மாதகாலமாக ஸ்ரீலங்காவில் கடைபிடிக்கப்பட்ட ஊரடங்குச் சட்ட இறுக்கங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. இந்த விடயமானது அரசாங்கத்தின் தேர்தலை இலக்காகக் கொண்ட செயற்பாடு என



தேசிய தாதியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றம்சாட்டியுள்ளார்.

எமது நாட்டில் இன்றைய தினம் ஊரடங்குச் சட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. ஏன் அவசர அவசரமாக இவ்வாறு செயற்படுகின்றனர் என்ற கேள்வி எழுந்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் விடயத்தில் ஏனைய உலக நாடுகள் ஒரு பாரிய மதிப்பீடொன்றை முன்னெடுத்தே தீர்மானங்களை எடுக்கின்றன.

எனினும் எமது நாட்டின் அரசாங்கம் அவ்வாறான மதிப்பீடு எதுவும் செய்வதில்லை. தேர்தலை இலக்காகக் கொண்டு இவ்வாறு அரசாங்கம் செயற்படுகின்றதெனின், தேர்தலுக்காக நாட்டை பாதாளத்திற்குள் தள்ளுவது நியாயமாக அமையாது.

தேர்தல் ஒன்றை நடத்தாமல் நாடாளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அதற்கு யாப்பு ரீதியில் இயலும். அவ்வாறு செயற்பட்டு, சுகாதார செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தல்கள் ஆணைக்குழுவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இரண்டு விசேடமானவர்களுக்கு விசேடமாக இரு விடயங்களை தெரிவிக்க விரும்புகின்றோம். ஒருவர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம். சுகாதார சேவையின் பிரதானமானவர். அவரை விஞ்ஞான பூர்வமான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கருத்துக்களை வெளியிடுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். உங்களது கருத்தே இந்த நாட்டு மக்களுக்கு கிடைக்கும் இறுதியான தகவலாகும்.

மற்றுமொரு தரப்பான தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றோம். நீங்களும் தொற்று நோய் தொடர்பிலும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நாட்டு மக்கள் தொடர்பில் சிந்தித்து யாப்பு ரீதியில் நாட்டின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்தி சரியான தீர்மானத்தை மேற்கொள்ளுங்கள். நாடு தொடர்பில் சிந்தித்து தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள்எனத் தெரிவித்தார்.

(தேர்தலை ஜுன் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கும் முடிவைத் தேர்தல் ஆணையம் எடுக்க முன்னர் இந்தக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.)

# முஸ்லிம்களும் இன்று விசேட பிரார்த்தனை

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து, அனைத்து பள்ளிவாசல்களிலும் இன்று விசேட பிரார்த்தனை நடத்துமாறு, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காலை 8 .40 முதல் 8.55 வரை பள்ளிவாசல்களில் இந்த பிரார்த்தனை நடைபெறவுள்ளதாக, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட வடுக்கள் இலங்கையர்கள் அனைவரது உள்ளங்களிலும் இன்னும் ஆறாமல் இருப்பதாக, அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையிலும், நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டியும் காலை 8.40 தொடக்கம் 8.55 வரை விசேட பிரார்த்தனையை முன்னெடுக்குமாறு, இலங்கை வக்பு சபையும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2020 இல் வெளியிடப்பெற்றது.